செ.வெ.எண்: 60 நாள்:22.08.2016

# பத்திரிகைச் செய்தி

## தொழுநோயினால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு பராமரிப்பு நிதியுதவி வழங்கும் திட்டம்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கீழ் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் மூலமாக தொழு நோயினால பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு மாதம் ரூ.1000 பராமரிப்பு உதவித்தொகை வழங்கும் திட்டம் செயலப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் மாற்றுத்திறனாளிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை நகல், குடும்ப அட்டை நகல், மார்பளவு புகைப்படம் (Passport size photo), வங்கிகணக்கு புத்தக நகல் மற்றும் வருவாய்த்துறையிலிருந்து மாதாந்திர உதவித்தொகை பெறவில்லை என்பதற்கான சான்று ஆகியவற்றுடன் 24.08.2016-க்குள் விண்ணபிக்கலாம் என்றும் அதற்கான விண்ணப்ப படிவத்தினை புதிய பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள புதுக்கோட்டை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் விபரங்களுக்கு 04322-223678 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொண்டு பயனடையலாம்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**